Ministry of Education
SINGAPORE

கல்வி அமைச்சின் சப்ளைக் குழு 2022

*வாழ்நாள் முழுதும் கற்றல்:*

# நாளைய பொழுதில் நம்பிக்கை கொள்வோம்

கல்வியின் ஒவ்வொரு கட்டத்திலும் நம் மாணவர்களுக்கு ஆதரவளிக்கும் முயற்சிகளை நாங்கள் தொடர்ந்து மேற்கொள்கிறோம். இதன் வாயிலாகக் கல்வியாளர்களோடும் ஏனைய சமுதாயத்தினருடனும் கூட்டிணைந்து, வாழ்நாள் முழுதும் கற்றல் இயக்கத்தை வழிநடத்திச் செல்கிறோம்.



## வாழ்நாள் பயணத்திற்கான வழித்தடங்களையும் வாய்ப்புகளையும் விரிவாக்குதல்

### எளிதில் அணுகத்தக்கதும் நெகிழ்வுமிக்கதுமான கல்வி வழித்தடங்கள்

- 2020முதல் 2024வரை உயர்நிலைப் பள்ளிகளில் முழுமையான பாட அடிப்படையிலான வகைப்பாடு (Full SBB) படிப்படியாக அமலாக்கப்படும்
- 2024-இல் கிரசண்ட் பெண்கள் பள்ளி, தஞ்சோங் காத்தோங் பெண்கள் பள்ளி, தஞ்சோங் காத்தோங் உயர்நிலைப் பள்ளி ஆகியவை முழுமையான பாட அடிப்படையிலான வகைப்பாட்டுத் திட்டத்தில் சேர்ந்துகொள்ளும்
- பலதுறைத் தொழில்நுட்பக் கல்லூரியின் அடிப்படைக் கல்வித் திட்டம் விரிவுபடுத்தப்படும்
- தொடக்கக் கல்லூரிகளில் நேரடிப் பள்ளிச் சேர்க்கைக்குரிய இடங்கள் அதிகரிக்கப்படும்

### வாழ்நாள் முழுவதும் கற்பவர்கள் திட்டத்தில் முதலீடு செய்தல்

- "வாழ்நாள் முழுவதுக்குமான கூட்டுப்பிரிவுப் பங்கேற்பு விகிதத்தை" உயர்த்த ஆய்வு மேற்கொள்ளுதல்
- செயல்முறைக் கல்வியில் வாய்ப்புகளும் வழித்தடங்களும் குறித்த மறுஆய்வின் பரிந்துரைகளை ஏற்றல்
- தொழில்துறைப் பங்காளித்துவத்தின் வாயிலாகப் பலதுறைத் தொழில்நுட்பக் கல்லூரி, தொழில்நுட்பக் கல்விக்கழகப் பட்டதாரிகளுக்கு மேம்பட்ட வேலை அனுபவத்திட்டங்கள், மேம்பாட்டுக்குரிய வாய்ப்புகள், நல்ல வேலைகள் ஆகியவற்றைப் பெறுவதற்கு வழிவகுத்தல்
- பணியிடைக்கால ஊழியர்களுக்காகப் புதிய ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பணி நிலைமாற்றத் திட்டம்
- கூடுதல் ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பயிற்சி உதவி நிதி (பணியிடைக்கால ஆதரவு) திட்டத்தின்கீழ் மேலும் பல பயிற்சி வகுப்புகள்

## தன்னம்பிக்கையும் மீளுந்தன்மையும் கொண்ட மாணவர்களைப் பேணி வளர்த்தல்

### சமூக, மனவுணர்வு சார்ந்த ஆற்றலை வலுப்படுத்துதல்

- திருத்தியமைக்கப்பட்ட ‘இளமாணவர்களைப் பேணி வளர்த்தல்’ பணிச்சட்டத்தை அறிமுகப்படுத்துதல்

- புதுப்பிக்கப்பட்ட நற்குணம் மற்றும் குடியியல் கல்விப் பாடத்திட்டம் பள்ளிகளில் அமல்படுத்தப்படும்

- உயர்கல்வி நிலையங்களுக்குரிய (IHLs) வாழ்க்கைத்திறன் பாடத்திட்டங்கள்

### எதிர்காலத்திற்கு ஆயத்தப்படுத்தும் திறனாற்றலை வளர்த்தல்

*21-ஆம் நூற்றாண்டுத் திறன்களை மேலும் வளர்க்க நேரமும் இடமும் ஒதுக்கப்படும்*

- 2023-ஆம் ஆண்டுக்குள் தொடக்கநிலை, உயர்நிலை நிலைகள் அனைத்திற்கும் அரையாண்டுத் தேர்வு நீக்கப்படும்; பொதுக் கல்வி முறையின் பாடத்திட்ட உள்ளடக்கமும் மதிப்பீட்டுத் தேவைகளும் மறுஆய்வு செய்யப்படும்

*பல்வகைத் தொடர்பிணைப்புகளுக்குக் கூடுதல் அனுபவ வெளிப்பாடு*

- ஒவ்வொரு பள்ளியிலும் வெளிநாட்டுப் பங்காளித்துவ முயற்சி மேற்கொள்ளப்படும்; தொகுதி அடிப்படையிலான மூன்றாம் மொழிப் பாடத்துக்குரிய முன்னோட்டச் சோதனை மேற்கொள்ளப்படும்

*தாய்மொழி ஈடுபாட்டை ஆழப்படுத்துதல்*

- உயர்நிலைப் பள்ளிகளுக்கான மலாய் மொழி விருப்பப்பாடத் திட்டத்திற்கு நான்காம் நிலையம் தொடங்கப்படும்

### வேறுபட்ட தேவைகள் உள்ள மாணவர்களுக்கு ஆதரவு

*மன நலன்*

- எல்லா மாணவர்களுக்கும் ஆதரவளிக்க சமூகப் பங்காளர்களோடு இணைந்து பணியாற்றுவதோடு, பள்ளிகள், பலதுறைத் தொழில்நுட்பக் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்விக்கழகம் ஆகியவற்றின் செயலாற்றலை வலுப்படுத்திக்கொள்ளல்

*வசதிவாய்ப்பற்ற பின்னணிகளைக் கொண்ட மாணவர்கள்*

- அதிகமான மாணவர்கள் ‘அப்லிஃப்ட்’ ஆதரவு பெறுவார்கள்

*சிக்கலான தேவைகள் உள்ள பலதுறைத் தொழில்நுட்பக் கல்லூரி, தொழில்நுட்பக் கல்விக்கழக மாணவர்கள்*

- தக்க சமயத்தில் பயன்மிக்க ஆதரவு அதிகமாக வழங்கப்படும்

*சமூக உறவாடல் மற்றும் பண்பியல்பு இடர்ப்பாடுகள் கொண்ட தொடக்கநிலை ஒன்றாம் வகுப்பு மாணவர்கள்*

- ஒருங்கிணைந்த நிலைமாற்றத்திற்குரிய ஆதரவு (TRANSIT) திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்

*சிறப்புக் கல்வி*

- தேசிய பாடத்திட்டத்தைப் பயிலக்கூடிய தொடர்புத்திறன் குறைபாடுள்ள (autism) மாணவர்களுக்காக செயிண்ட் ஆண்ட்ரூஸ் மிஷன் பள்ளி திறக்கப்படும்

- பல்வேறு இயலாமைக் குறைபாடுகள் கொண்ட மாணவர்களுக்காகப் புதிய பள்ளி அமைக்கப்படும்



© 2022 கல்வி அமைச்சு, சிங்கப்பூர். அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.

## மாற்றத்தை வழிநடத்திடக் கல்வியாளர்களுக்கு அதிகாரமளித்தல்

- ஆசிரியர் பணி இணைப்பு ‘பிளஸ்’ திட்டத்தின்வழியே ஆசிரியர்களின் கண்ணோட்டங்களும் தொழில்சார்ந்த அறிவாற்றலும் விரிவுபடுத்தப்படும்
- பணிச்சுமையை நல்வழியில் கையாளவும் மனநல ஆதரவு பெறவும் கூடுதல் ஆதரவு வழங்கப்படும்

## சுற்றுப்புறக் காப்பாளர்களைப் பேணுதலும் நீடித்த நிலைத்தன்மைமிக்க தலைவர்களை உருவாக்குதலும்

- உயர்கல்வி நிலையங்களில், பசுமை வேலை வாய்ப்புகளுக்குப் பட்டதாரிகள் உருவாக்கப்படுவார்கள். சிங்கப்பூரின் நீடித்த நிலைத்தன்மை பயணத்திற்குப் பங்களிக்கும் ஆய்வுகளிலும் புத்தாக்கத் திட்டப்பணிகளிலும் அவர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்
- பள்ளிகளில், சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டத்தின்மூலம் நீடித்த நிலைத்தன்மை முனைப்புகள் செயற்படுத்தப்படும்

## பங்காளித்துவ முயற்சிகளின் வழியே மனப்போக்குகளை மாற்றுதல்

- பெற்றோர் ஆதரவுக் குழுக்கள், காம்பஸ் பள்ளிகளுக்கான பெற்றோர், சமூக ஆதரவு மன்றம் ஆகியவற்றின் வாயிலாகப் பெற்றோர்களுடன் தொடர்பிணைப்பு ஏற்படுத்தி ஆதரவளிக்கப்படும்.பிள்ளைகளின் மனநலனை மேம்படுத்துதல், வெற்றி குறித்த வரையறைகள் முதலான கூறுகளில் வழிகாட்டுதல் வழங்கப்பெறும்
- இளையர் மனநலக் கட்டமைப்பு, ‘அப்லிஃப்ட்’ போன்ற சமூகக் குழுக்களுடன் கூட்டு முயற்சி மேற்கொள்ளப்படும்



**மேல்விவரம் அறிய, நாடுங்கள்:**
**www.moe.gov.sg/microsites/cos2022**

© 2022 கல்வி அமைச்சு, சிங்கப்பூர். அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.